ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2320/47 - 2023 පෙබරවාරි මස 22 වැනි බදාදා - 2023.02.22

*2320/47 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டம்*

*1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் உபபிரிவு 4(1), 6ஆம் பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்பட வேண்டிய 20 ஆவது பிரிவின் கீழ் நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராகிய ரணில் விக்கிரமசிங்க ஆகிய என்னால் பின்வரும் விதிமுறைகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.*

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார நிலை பேறு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2023, பெப்புருவரி மாதம் 22.

1A - PG 6249 — 376 (2023/01)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## ஒழுங்குவிதிகள்

1. இவ்ஒழுங்குவிதிகள் **"2023 ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்"** என அழைக்கப்படும்.

2. 2023ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆம் திகதி அதிவிஷேட இல. 2312/78, வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, 2023 இல. 02 இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் இத்தால் திருத்தப்பட்டுள்ளது.

3. மேல் குறிப்பிடப்பட்ட 2023 ஆண்டு இல. 02 இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் இல. 8 (த) நீக்கப்பட்டு மாற்றீடாக பின்வரும் புதிய இல. 8 (த) பின்வருமாறு வாசிக்கப்பட வேண்டும்.

"8 (த) HS குறியீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட பொருட்களின் இறக்குமதி, **3303.00.10**, **3303.00.22**, **3303.00.29**, **3304.10**, **3304.20**, **3304.30**, **3304.91**, **3304.99**, **3305.10**, **3305.20**, **3305.90**, **3306.10**, **3306.90**, **3307.20** மற்றும் **3307.49** அட்டவணை I இல் பட்டியலிடப்பட்டுள்ளபடி, தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையத்தில் பதிவுசெய்து, தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையத்திடம் இறக்குமதி உரிமம் பெற்ற எந்தவொரு இறக்குமதியாளரும், இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு நாயகத்தின் முன் அனுமதியின் பேரில் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுவார்கள். கூறப்பட்ட பொருட்களின் இறக்குமதியின் அதிகபட்ச மதிப்புக்கு உட்பட்டது, வருடாந்தர சராசரி செலவு காப்பீட்டு சரக்கு மதிப்பின் 50% வரை வரையறுக்கப்பட்டுள்ளது, இது அத்தகைய இறக்குமதியாளரின் கடந்த ஐந்து (05) வருடங்களின் போது கூறப்பட்ட பொருட்களின் இறக்குமதி மதிப்பின் அடிப்படையில் கணக்கிடப்படும்

4. மேலே குறிப்பிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்ட ஒழுங்குவிதிகளில் Iஆவது உப அட்டவணையில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் அவற்றிற்கான குறியீடுகள் இதன் மூலம் நீக்கப்படும்.

| | Iஆவது நிரல் ஒருங் கிணைந்தவகைப் படுத்தல் குறியீட்டுத் தலைப்பு | IIஆவது நிரல் ஒருங் கிணைந்தவகைப் படுத்தல் குறியீட்டுத் | | III ஆவது நிரல் விபரம் | IVஆவது நிரல் தற்காலிக இடைநிறுத்தல் (TS) பட்டியல் ஆ |
|---|---|---|---|---|---|
| 63 | 44.07 | | | **தட்டையாக்கப்பட்ட மினுக்கப்பட்ட அல்லது விரல் முடப்பட்டு இணைக்கப்பட்ட அல்லது இவை செய்யப்படாத 6 மி.மீற்றருக்கு மேற்பட்ட தடிப்புடைய நீளப்பாட்டில் அரியப்பட்ட அல்லது பிளக்கப்பட்ட துண்டு போடப்பட்ட மரம்.** | |
| | | | - | பிற: | |
| | | 4407.91 | -- | 'ஓக்' இன (குவேர்க்கஸ் இன) | **TS** |
| | | 4407.92 | -- | 'பீச்' இன (வேகஸ் இன) | **TS** |

5. இவ் ஒழுங்குவிதிகள் தொடர்பாக எழும் ஏதேனும் சிக்கல்கள் குறித்து இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகம் மூலம் இறுதி முடிவுகள் எடுக்கப்படும்.

6. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு நாயகத்தின் மூலம் இவ் ஒழுங்குவிதிகளை வினைத்திறன் மிக்கதாக செயற்படுத்தப்படுவதற்காக சுங்கப் பணிப்பாளருக்கு, அனுமதிப் பத்திரதார வங்கிகளுக்கு, "செயற்பாட்டு ஆலோசணைகள்" வழங்கப்படும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.